# தொகுதி மறுவரையறை: தமிழ்நாடெங்கும் கருப்புக்கொடிப் போராட்டம்!



மத்திய அரசால் கொண்டுவரப்படவுள்ள புதிய தொகுதி மறுவரையறை எதிர்ப்பு தெரிவித்து வீடுகளில் கருப்பு கொடி ஏற்ற வேண்டுமென தமிழக முதலமைச்சர் அறிவித்தார் திமுக தொண்டர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க அனைவரும் இல்லத்திலும் கருப்புக்கொடி ஏற்றி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைமை அறிவித்திருந்த நிலையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தனது இல்லத்தில் முன்பு உள்ள கம்பத்தில் கருப்பு கொடியேற்றி ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பை காண்பித்தார். மத்தியில் கொண்டுவரப்பட்ட இந்த தொகுதி மறு வரையறை சட்டத்திற்கு முழுமையாக எதிர்க்கிறோம் என்று தெரிவித்தார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளத்தில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் மத்திய அரசு கொண்டுவரப்பட்ட புதிய தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினார். நிகழ்வில் திருவரங்குளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அரு.வடிவேல், மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாத்துரை, உஷா செல்வம், எம் எஸ் முருகன், ஆறுமுகம், சுரேஷ், குமரேசன், முகம்மது ரபீக், பால பிரபாகரன், அஜய், நிருபர் பாலு ராஜா , முகமது கனி, ராஜாக்கண்ணு, மருதன், உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கோசமிட்டனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், தொகுதி மறுவரையறை மசோதா தாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கருப்புக் கொடி ஏற்றி கோஷங்கள் போடப்பட்டது. இதில் எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ., மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், வேட்பாளர் டாக்டர் S .T. ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறையை எதிர்த்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நாகை மாவட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக வாயிலில் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் கருப்பு சட்டை அணிந்து கருப்பு கொடி ஏற்றி ஒன்றிய அரசுக்கு கண்டனத்தை தெரிவித்தனர் உடன் நாகை நகர கழக செயலாளர் இரா. மாரிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி ஆலோசனைப்படி பேடாரஹள்ளி,சோமனஹள்ளி,பாலவாடி, உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில்த தே.மு.தி.க.ருமபுரி தொகுதி வேட்பாளர் டாக்டர்.இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் தி.மு.க. ஒன்றிய செயலாளர் வைகுந்தம்,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ஹரி விக்னேஷ்,டாக்டர். சக்திவேல்,பேச்சாளர் டி.ஏ.ரவி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் குமார்,தே.மு.தி.க. நகர செயலாளர் கேப்டன்.சுரேஷ் மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.



தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மாநிலங்களுக்கு மாபெரும் வரலாற்று அநீதி இழைக்க துடிக்கும் ஒன்றிய பாசிச பாஜ.க. அரசை கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கும்பகோணம் 1000 கருப்பு பலூன்களை பறக்கவிட்டும், தொகுதி மறுவரையறை சட்டமசோதாவை எரித்தும் மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இதில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர். அசோக்குமார், எல்.ராஜேந்திரன், பகுதிச் செயலாளர்கள் டி.வி.கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், மு.கண்ணன், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், சிவானந்தம், விசாலாட்சி, எஸ்.இரவிச்சந்திரன் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொகுதி மறு வரையறை தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கருப்புக் கொடி போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். அதன் தொடர்ச்சியாக கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர், கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் வெங்கிட்டாபுரத்தில் மசோதா நகலை எரித்து கண்டன போராட்டத்தில் ஈடுபட்டார். இதில் மாவட்ட துணைச்செயலாளர் கல்பனா செந்தில், பகுதி கழக பொறுப்பாளர் சிவராமன், பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி, மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறைக்கு எதிராக மேட்டுப்பாளையம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைமை தேர்தல் அலுவலகம் முன்பு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கருப்புச் சட்டத்தின் நகலை எரித்தார். இதில் கழக தொழிலாளர் இணை செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், காரமடை நகர கழக செயலாளர் குரு பிரசாத், மேட்டுப்பாளையம் நகரங்களுக்கு பொறுப்பாளர்கள் அசரப் அலி, முனுசாமி, மாவட்ட அவைத் தலைவர் புருஷோத்தமன், மேட்டுப்பாளையம் தொகுதி பார்வையாளர் ராஜகாந்தன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கோவை தெற்கு மாவட்டம், சூலூரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டுவரப்படும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து சூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்தார். இதில் ரகு, கௌதம், சூலூர் பிரபு, ரமேஷ் பாலு, அரசர் பூபதி, மாதப்பூர் தங்கராஜ், மருத்துவர் அணி அமைப்பாளர் சிவப்பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள தொகுதி மறு வரையறை மசோதாவை கண்டித்து ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாநில மாணவரணிச் செயலாளர் ஜெ.வீரமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சட்ட நகல் எரிப்பு போராட்டம், ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லப்பொன்னி, ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, மு.சுப்பிரமணியம், அக்னி டி.சந்திரசேகரன், வி.சி.நடராஜன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், குறிஞ்சி என்.தண்ட பாணி, தனசேகர், திலகவதி, ஸ்ரீதர், சதீஷ்குமார், நல்லசிவம், விஜயகுமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.